ஐக்கிய அரசுகள் அமெரிக்க தூதரகம் கொழும்பு

# பத்திரிகைக் குறிப்பு

பொது விவகாரங்கள் பிரிவு
தொலைபேசி: +94 (1) 249-8100 ● தொலைநகல;: +94 (1) 244-9070
மின்னஞ்சல்: VanHornNT@state.gov ● http://lk.usembassy.gov

பத்திரிகை குறிப்பு இல. 20180201

**அமெரிக்காவும் இலங்கையும் ஒன்றாகப் செயற்படும் 70வது ஆண்டைக் கொண்டாடுகிறது**

பெப்ரவரி 1, கொழும்பு: பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கையின் சுதந்திரத்தின் 70வது ஆண்டு நிறைவைக் குறிக்கிறது. ஐக்கிய அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 70வது ஆண்டு நிறைவையும் இது குறிக்கின்றது. இந்த மைல் கல்லினைக் கௌரவிக்கும் முகமாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகமானது அடுத்த 12 மாதங்களுக்கான நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிக்க உள்ளது. நாட்டின் எல்லாப் பின்புலங்களையும் சகல மதங்களை சார்ந்த இலங்கையர்களையும் இணைத்து மேற் கொள்ளப்படும் கலாச்சார நிகழ்வுகளையும் கல்விச் சந்தர்ப்பங்கள், மற்றும் சமூக ஈடுபாடுகளை உள்ளடக்கிய, #USASL70 நிகழ்ச்சிகள், 7 தசாப்தகால ஐக்கிய அரசுகள் இலங்கை உறவுமுறையின் மதிப்பு மற்றும் பங்காண்மையின் அம்சங்களினை முக்கியத்துவப்படுத்துகிறது.

“எமது தூதரகச் சமூகமானது எமது இலங்கை நண்பர்கள் மற்றும் பங்காண்மையாளர்களுடன் இந்த மிகச் சிறந்த ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதில் மகிழ்வடைகிறது” என தூதுவர் கெசப் தெரிவித்தார். “ஏழு தசாப்தங்களாக ஐக்கிய அரசுகளானது இலங்கையுடன், மிகப் பெரிய வெளிநாட்டு உதவிக் கொடை வழங்குனர்களுள் ஒருவராகவோ அல்லது இலங்கையின் மிகப் பெரிய வர்த்தகப் பங்காளராகவோ தோழோடு தோள் நின்றுள்ளது.”

நியுயோர்க் நகரத்தின் jazz கலைஞர்கள் Wycliffe Gordon னைக் கொண்டாடியவர்கள் பெப்ரவரியின் இறுதிப்பகுதியில், இலங்கைக்கு பயணிப்பதுடன், 70வது ஆண்டு நிறைவை ஐக்கிய அரசுகள் தூதரகம் கொண்டாடுகையில் விசேட முக்கிய உள்ளடக்கத்தையும் வழங்குவர். இவ் கோடன் குழுவினர் கொழும்பிலே பொதுமக்களின் பார்வைக்கு விடப்படும் முறைசாராக் காட்சிகளுக்கு, மேலதிகமாக ஒரு பெரும் கலை நிகழ்வையும் நடாத்துவர். ஒரு வருட நீளத்திற்கு நடைபெறவிருக்கும் ஏனைய மிகப் பெரிய கலாச்சார நிகழ்வுகளில், ஐக்கிய அமெரிக்க படத் தயாரிப்பாளர்களின் வருகையையினை முக்கிய அம்சமாகக் கொண்ட அமெரிக்க திரைப்படக் காட்சி, அமெரிக்க பல்கலைக்கழக கல்வி சந்தர்ப்பங்களுக்கான ஒரு கல்விச் சந்தை, இலங்கை இளைஞர்களுடனான ஒரு விளையாட்டு பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டம் என்பனவும் உள்ளடங்கியுள்ளன.

#USSL70 என்பது இலங்கைக்குத் திரும்புவதற்கு அமைதிப்படையின் இருதரப்பு ஒப்பந்தக் கைச்சாத்திடுதல் போன்ற புதிய முக்கியத்துவம் வாய்ந்த இருதரப்பு முனைப்புக்களையும் எடுத்துக்காட்டும். இருதரப்பு நாடுகளுக்கும் இடையிலான பயிற்சிகளில் செயற்பாடுகளின் பிரச்சாரத்தின்பொழுது, இராணுவத்தினர் அனர்த்த பதிற்செயற்பாடுகளை அதிகரித்துக் கொள்வதுடன், இடையேயான நடவடிக்கைக்கான திறனையும் விஸ்தரித்துக் கொள்வர். சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவராலயத்தின் ஆதரவளிப்புடன் 21 ஆம் நூற்றாண்டுக்கான வேலைவாய்ப்புக்காக இலங்கை இளைஞர்களைத் தயார்படுத்த உதவும் அதேவேளையில் இலங்கையின் பாற்பண்ணை உற்பத்தி தொழிலை மிகவும் உற்பத்தி திறனானதாகச் செய்வதற்கு விவசாய உதவிகளும் வழங்கப்படும்.

“எமது #USASL70 நிகழ்ச்சித்திட்டம், நம் வரலாற்றை பின்நோக்கிப் பார்ப்பதற்கு மேலாக, பிராந்தியத்தில் சகிப்புத்தன்மை மற்றும் வளத்தின் ஒரு ஒளிக்கீற்றாக இருக்கக்கூடிய வகையில், ஒரு நிலையான ஜனநாயகத்துடனான இலங்கையின் எதிர்காலத்திற்கான ஒரு பார்வை நோக்கு பற்றியதாகும். இன்னும் 70 வருடங்களிலும் அதற்குப் பின்னும் அமெரிக்கா அந்தப் பார்வை நோக்குகளை யதார்த்தமாக்குவதற்கு இங்கே அது உதவி செய்யும்’’ என தூதுவர் கெசாப் மேலும் தெரிவித்தார்.